**SC.No.18/2021**

**நாள்.. 13**.10.2025

**அ.சா.02–** இராஜேந்திரன் த/பெ. முனியசாமி

<u>(எதிரிகள் 1, 9 இறப்பு, 2,3,7,8,13,16,18.,19 ஆஜரில்லை.எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜர்..</u>

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> –**

இவ்வழக்கின் புகார்தாரர் விஜய் என் மகன் என்றால் சரிதான். 6 வருடங்களுக்கு முன்பு என் தம்பி செல்வத்தின் (அ.சா.7) மகனின் காதணி விழா நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விழா காலை 11.00 மணியளவில் முடிந்துவிட்டது என்றால் சரிதான். அன்றைய தினம் நான் மது அருந்திவிட்டு கறி சாப்பாடு சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு சென்று தூங்கிவிட்டேன். காதணிவிழா நடந்த வீட்டிலிருந்து என்வீடு 2 Km தொலைவில் உள்ளது. என் மகன் விஜய் எங்கு போனார் என்ன ஆனார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். மறுநாள் காலையில் தான் 2 நபர்கள் குண்டுமணியும் என் சித்தப்பா இராமசாமியின் மகன் விஜய் ஆகிய இருவரும் இறந்தபோன விவரம் தெரியும். அவர்கள் எப்படி இறந்தார்கள் என்று தெரியாது. போலிசார் வந்து என்னிடம் வந்து வெற்று பேப்பரில் கையொப்பம் வாங்கினார். அதில் என்ன எழுதிகொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொன்ன விசயங்கள் அனைத்தும் போலிசார் மிரட்டி சொல்ல சொன்னதால் சொன்னேன். போலிசார் ஆயுதங்களை ஏற்கனவே சொல்லிக்கொடுத்து தான் நீதிமன்றத்தில் சாட்சியம் சொன்னேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் எதையும் பார்க்கவில்லை எதுவும் தெரியாது என்றால் சரிதான். என் மகன் விஜய் எவ்வாறு காயம் ஏற்பட்டது யாரால் காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.